# திராவிடநாடு


-9-57 | வார வெளியீடு | விலை 0-2-6



Loganathan,
AVELU MUDALI ST
BUR, MADRAS-11

G. Loganathan
15, RAJAVELU MUDALI
PERAMBUR, MADRA





# புகழின் இருப்பிடம்

30—8—57 எனது நண்பர் என். எஸ். கிருஷ்ணன் இவ்வுலகத்திலிருந்து மறைந்தார். அவரை சிறு பால்யம் முதல் எனக்கு நன்ருய்த் தெரியும். சிறுவனுக ஓர் நாடகத்தில் அவர் நடித்ததை நான் பார்த்தபோது இப்பிள்ளை நல்ல ஆசிய நடிகனுவான் என்று கூறியது எனக்கு நினைவிலிருக்கின்றது. என் வாக்கு பலித்தபோதிலும், அவர் தனது நாற்பத்தி ஒன்பதாவது வயதில் மறைவார் என்று நினைக்கவில்லை. அவர் சில பாய்ஸ் கம்பெனிகளில் எனது நாடகங்களில் ஹாசியபாகத்தில் நடித்ததைப் பார்த்திருக்கின்றேன். அவரது முக்கியமான குணம் என்னவென்ருல், இந்த பாகத்தை இப்படி நடிக்கவேண்டும் என்று சொன்னுல் அதன்படி நடிப்பதுடன், அதற்கு மேலும் யுக்திசெய்து மேலும் நன்ருக நடிப்பார். இந்த குணம் சாதாரணமாக கிடைப்பது அரிது. அவர் நாடக அரங்கத்தைவிட்டு, பேசும் அரங்கத்தில் நுழைந்து ஏறக்குறைய 100 படத்திற்குமேல் நடித்திருப்பது நடிக உலகம் நன்ருக அறியும். அதைப்பற்றி நான் ஒன்றும் கூறத்தேவையில்லை.

அவர் என்னைத் தன் தந்தையைப் போல பாராட்டி அன்பு கூர்ந்தார். சில மாதங்களாக எனக்கு நடிகச் சங்கங்கள் செய்த மரியாதையைப் பற்றி நான் நினைக்கும்போது, அவர் என்னை அன்புடன் பாராட்டிய பெருமையை நான் மறக்க இயலவில்லை. அதற்கு என்னால் கைமாறு என்ன செய்யமுடியும்?

சில வருடங்களுக்கு முன்பாக சென்னையில் ஓர் இடத்தில், ஒரு பெரும் நடிகர் கூட்டத்தில் குழுமியிருந்த நடிகர்களின் வேண்டுகோளின்படி அவருக்கு கலைவாணர் என்னும் பட்டத்தை வழங்கிய பெருமை என்னுடையதாகும் என்று சந்தோஷத்துடன் சொல்லிக்கொள்ளுகின்றேன். ஆயகலைகள் அறுபத்து நான்கில் நடிப்புக் கலையும் ஒன்ருகும். அந்நடிப்புக்கலைக்கு நான்கு முக்கியமான ரசங்கள் வேண்டியதாகும் அவற்றுள் ஒன்று ஹாசிய ரசமாகும். அந்த ஹாசிய ரசத்தில் தனக்கு ஈடு இல்லை என்று புகழ் பெற்ற எனது நண்பர் கிருஷ்ணன் அவர்களை கலைவாணர் என்று அழைத்ததில் தவறென்ன?



நாடகங்களிலும், பேசும் படங்களிலும் அவர் வகித்திருந்த ஓர் இடம், அவரைப் போன்ற சிறந்த நடிகர் ஒருவரால் நடிக்கப்படஎத்தனை வருடங்களாகுமோ, நான் அறியேன்.

ஆயினும், அவருடைய நினைவு மாத்திரம் நாடக மேடையிலும், பேசும் திரைகளிலும் ஹாசிய பாகங்கள் வரும் போதெல்லாம் நமது துர் அதிர்ஷ்டத்தால் மறைந்தகிருஷ்ணன் அவர்களுடைய நினைவு யாருக்கும் வராமல் போகாது. "தோன்றிற் புகழுடன் தோன்றுக" என்பதற்கு இலக்காக அவர் இவ்வுலகில்தோன்றி பிறகு, புகழுடனே மறைந்தார்.

—சம்பந்தனர்,
நாடகப் பேராசிரியர்.

## மறைந்தார் கலைவாணர்

(வீரா. விநாயகம்)

கலையை வளர்த்தோன் கவலையைத் தீர்த்தோன்
இல்லையென்னது எடுத்துமே கொடுத்தோன்
விலைமதிக் கொண்ணு வேடிக்கை யாளன்
மலையசைந் தாலும் மனமது தளருன்!
பண்பது உடையோன் பகுத்தறி வாளன்
உண்மை உழைப்பும் உறுதியும் கொண்டோன்
பண்டைப் பெருமையை பாவில் தருவோன்
மண்ணகம் மதிக்கும் மாபெரும் குணத்தோன்!
இன்ப முகத்தோன் இன்சொல் நடிகன்
துன்பம் போக்கிய தூய்மை மதியோன்
என்.எஸ். கிருஷ்ணன் எய்திய இயற்கை
என்றும் மறவா செய்தியே ஆகும்!
தப்பித மில்லா தமிழக மணியை
எப்படிப் பெருவது? எங்ஙனம் மறப்பது?
செப்பிய பாவலர் பாக்களால் பாடியே
ஒப்பிலா மலர்களைத் தூவியே வாழ்த்துவோம்!

# இருண்டது நம் இல்லம்......

[...]ர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [8—9—57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 8

— தமிழகமே! தமிழகமே! தளைகளால் கட்டுண்டு கிடக்கும் தாயகமே! உன்னை எழிலகமாக்கிட ஓயாது உழைத்துவந்த உத்தமத் திருமகனை, ஒப்பிலா கலை; மாமணியைய, நகைச்சுவை அரசை, கலைவாணரையுமன்றோ பறிகொடுத்துவிட்டு, தலைவிரி கோலமாகி, கண்ணீர் பெருக்கி நிற்கிறாய்! தாயே! ஆற்றொணாப்பெருந்துயரால் தாக்குண்டு தவித்திடச் செய்துவிட்டு, நமது கலைமன்னன், மறைந்தனரே! ஐயயோ! எவருடைய பேராற்றலால், புதிய எழுச்சிகிடைக்கப் பெற்று மகிழ்ச்சி அரும்பிடும்நிலை கண்டனமோ, அவரன்றோ, அம்மா! நமைவிட்டுப் பிரிந்தார்! கலைக்கருவூலத்தைக் காலமெனும் கொடியோன், தட்டிப் பறித்துக் கொண்டானே! தமிழகத்திலே தனிச்சிறப்புடன் ஓங்கி வளர்ந்த கலைத்தரு வெட்டி வீழ்த்தப்பட்டு விட்டதே. ஐயகோ! பேரிடி வந்துற்றது. பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது! ஏனோ நமை இத்தகையதோர் வேதனை கப்பிக் கொண்டது. என்ன பிழை செய்தோம், இதயத்தைப் பிளந்திடும் இன்னலை அடைந்திட? எங்ஙனம் தாங்கிக் கொள்வது? எவ்வாறு வேதனை வெள்ளத்திலிருந்து தலை தூக்குவது? இயலுமா? நம்மால் இயலுமா? அன்னையே! உடன் பிறந்தோரே! உத்தமத் தோழர்காள்! இருபது



ஆண்டுகளுக்கு மேலாக நமது இதயத்தில் இடம்பெற்றிருந்த கலைவாணரையன்றோ இழந்து நிற்கிறோம். எதைஎதனையோ இழந்தோம்—கொற்றம் இழந்தோம், பெற்றெடுத்த பண்பின் மாண்பினையும் சிறிது சிறிதாக இழந்தோம், பொன்னும் பொருளும் பெருமளவு இழந்திட்டோம்—எனினும், நாட்டின் நிலையினை உயர்த்திட நற்றொண்டு ஆற்றிடும் நோக்குடன், கலைப் பணியாற்றிடும் காவலனைக் கண்டோம், இனி இழந்தது பற்றி வருந்துவானேன், பெரியதோர் பேறு பெற இருக்கிறோம் என்று இறுமாந்து கிடந்தோம் — எமது கலைவாணர், தூங்கிக்கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்புகிறார், விவரமறியாதிருந்த மக்களை எல்லாம் சிரித்திடச்செய்து சிந்திக்க வைக்கிறார், செயலாற்றும் திறன் பெறுகின்றனர் நமது மக்கள், இனிக் கவலை எற்றுக்கு? வீறு கொண்டு எழப்போகின்றனர்! பகை, தூள்! தூள்! தளைகள் இனி, பொடிப் பொடியாகும்! தன்மானம் பெற்றனர். இனித் தமிழ்த் தரணியில் தருக்கரின் ஆதிக்கம் தவிடுபொடிதான்! —என்றெல்லாம் பேசிப் பேசி மகிழ்ந்தோமே— பெருமிதம் கொண்டோமே—புன்னகையை வீசி மாற்றாரை எள்ளனமே கூடப் புரிந்தோமே—கலம் சுக்கு நூறாணதென்ன—

இதோ தோணியுடன் எமது தோழன் வருவது காணீர்! என்றன்றோ எக்களிப்புடன் கூறினோம். அந்தோ! தோணியைச் சூறைக் காற்று சுக்கு நூறாக்கிவிட்டால் என்னென்பது! அதனினும் கொடுமையானதாகவன்றோ, கேடு வந்துற்றது. தோணியை நமக்காகச் செலுத்தி வந்தவனையன்றோ, சாவு எனும் சுறா விழுங்கிடக் கண்டோம்! கண்டோம், காப்பாற்றிட இயலா நிலையில்! நம் கண்ணெதிரே அவர் மரணத்தின் பிடியிலே சிக்கினார்! கூவினோம் — கதறினோம் — பதறினோம் — வேறென் செய்தோம்—வேறு செய எவரே ஆற்றல் படைத்தார்—நாம் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அவர் மறைந்தார்—நாம்? புலம்பிக் கிடக்கிறோம்! இருண்டு கிடந்த இல்லத்துக்குக் கிடைத்த ஒளிவிளக்கு பேய்க் காற்றுக்கு இரையாயிற்று—எங்கும் இருள் கப்பிக் கொண்டுவிட்டது. தமிழகமே! தாயகமே! உத்தமனும் நகைச்சுவை அரசு, உலவிடத்தக்க தகுதியும் உனக்கு இல்லை என்பதனாலா, காலமெனும் கொடியோன், அவரைக் கடத்திச் சென்றான். ஐயயோ! நமக்கேன் இத்தகைய பேரிடி வரவேண்டும். பட்டதெலாம் போதாதா—நெஞ்சு இந்த வேதனையைத் தாங்கிடும் நிலையிலும் இலையே—கலைவாணர் போன்றார் பலருளர் என்று கூறத்தகும் நிலை இல்லையே —அவர் கலைவாணராக மட்டும் திகழ்ந்தவரல்லவே —நமது நாட்டின் தலைமகனாக, விடுதலை வீரனாக, ஏழை பங்காளனாக, எவருக்கும் இதமே புரியும் ஏந்தலாகவன்றோ விளங்கிவந்தார்! நமக்காகவே வாழ்ந்தார், தன் திறமத்தனையும், காலம் முழுவதையும், நமக்கே தந்தார், நாம் அவருக்குத் தந்தது என்னை? அந்தோ! பெருநெருப்பினை அல்லவா மூட்டினோம்! அஃது அவர் உடலை மட்டுமா பீடித்தது, நமது உள்ளத்தையன்றோ சுட்டெரித்த வண்ணம் இருக்கிறது.

ஆடுநரும் பாடுநரும், அருங் கவிதை ஆக்குவோரும், உளர்; நிரம்ப உளர்.

புலமையின் பொலிவினை நல்குவோரும், அறம், அருளுடைமை அஞ்சாமை எனும் நெறி தரும் திறத்தினரும் பலர் உளர்.

வாழ்வுக்கு வழி கூறுவோரும், வறியோருக்கு உதவுவோரும், தொழில் நுட்பம் உரைப்போரும், துரைத்தனம் நடாத்துவோரும் தொகை தொகையாக உளர்.

ஆனால் இவை அத்தனையும் திரண்டெழுந்து ஒருருவில், நம்மிடை உலவி, நமக்காகப் பணியாற்றி நமது உயர்வு கண்டு உளமகிழ்ந்து, நாட்டின் ஏற்றம் கண்டிட நாளெல்லாம் கலைத் தொண்டாற்றி வந்த, நகைச்சுவை அரசு, அவர் ஒருவர் தானே! காலமே! முடிபறித்தாய்! மூதாதையை விட்டுச் சென்ற முத்தமிழைக் குலைத்தாய்! எழிலார்களையெல்லாம் கடலடி கொண்டு சேர்த்தாய்! மாற்றாரின் தாளிலே எமது சிரம்படும் சிறுமை வினையும் செய்து செருக்குற்றாய்! ஆறுதலளிக்க, விழித்திடச் செய்ய, எழுச்சிபெற வைத்திட, எமக்கெனக் கிடைத்த ஒரே ஒரு உத்தமக் கலைஞனையுமா, கொண்டு செல்லவேண்டும், கன்னெஞ்சனும், கண்ணைப் பறித்தாலும், கைக்கோலேனும் தருவானே! எமக்கெலாம் கலங்கரை விளக்காகி நின்ற, கலைவாணரையுமா, நாங்கள் இழந்திட வேண்டும். ஏன்? ஏனோ? அந்தோ! ஏனோ இக்கொடுமை? எதற்கோ இத்துணை வேதனை எமை வந்து தாக்குவது?

தமிழன தலை நிமிர்ந்து நடந்திடத்தான் போகிறான், தளைகளை உடைத்தெறிந்துவிடுத் தனுட்சி காணத்தான் போகிறான் — அதோ காணீர், அவன் கண்களிலே ஓர் புத்தொளி, அவன் பேச்சிலே ஒரு புதுத் தெளிவு, அவன் சிந்தனையிலே ஓர் புதுமை, அவன் செயலிலே ஓர் செம்மை—எனறெல்லாம மார் தட்டிக் கூறி வந்தோம் — அந்த நிலைக்குச் சான்றுண்டோ என்று கேட்டோருக்கு, கெக்கலி கொட்டவும் கேளிக்கை காணவும், இதுநாள் வரை பயன்பட்டு வந்த 'கூத்துமேடை' கோமாளி ஆட்டம், இன்று எமது நகைச்சுவை அரசின் கரம் பட்டு, கருத்தளித்து களிப்புமளித்து, கலை விருந்தாகி அதே போது மக்கள் தம் உளப்பாங்கினை உயர்த்திடும் வாய்ப்பளித்து, தனிச் சிறப்புடன் துலங்குவது காணீர்! இந்த எழு ஞாயிறு, எதற்குச் சான்று

(13-ம் பக்கம் பார்க்க)



தூ - என் - வி. - யுடன் என். எஸ். கே.

# ★ "நெஞ்சு மறக்குதில்லையே!" ★

[ அரங்கண்ணல் ]

இடுகாட்டில் நகைச்சுவை மன்னரின் ஆஸ்தான கவியென விளங்கிய கொங்கு நாட்டு வல்லவர் உடுமலை **நாராயண கவி** அவர்கள், அழும் குரலில் உதிர்த்தார், "**கலை என்பது உடல் போன்றது. அதற்கு உயிர், கற்பனைதான். அந்தக் கற்பனை போய்விட்டது. இதோ, உடல் மட்டுமே கிடக்கிறது,**" என்று. கலைவாணரின் துருதுருத்த சுபாவமும், கற்பனைத் திறனும் சாமான்யமானதல்ல! சாதாரண விஷயமானாலும, அதற்குள்ளே தான் சொல்ல விரும்பும் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை வெகு அழகாக அமைத்துவிடுவார். 'கோவலன்' நாடகத்தில் வரும **வஞ்சிப் பத்தரின்** பாத்திரத்தை யாவரும் அறிவோம். வஞ்சியின் சூழ்ச்சியினாலேயே, கோவலனை, பாண்டியன் நெடுஞ்செழியன் தண்டிக்கவும் நேர்ந்தது. இந்த வஞ்சிப் பத்தருக்கு எதிரிடையாக **இஞ்சிப் பத்தரைச்** சிருஷ்டித்தார் என். எஸ். கே! வஞசிபபத்தர் வீட்டில் வைக்கப்பட்டிருந்த பாண்டியமாதேவியின் சிலம்பினை, கருடன் கொண்டு போய்விட்டதல்லவா? 'கருடன்', என்பதற்கோர் உருகொடுத்தார் நமது கலையரசர்!! அதற்கு ஒட்டி வருமாறு, ஒரு கதையை அமைத்துக்கொண்டார், "**கண்ணகி**"யில். வஞ்சிப் பத்தருக்கு ஒரு மகள் (மதுரம்)! அவளுக்கு கிருஷ்ணன் (என. எஸ். கிருஷ்ணன அல்ல, சாட்சாத் குழலூதும் கிருஷ்ணன் மீது) காதல்—முற்றி பைத்தியமாகி விட்டிருந்தாள்!! மகளின் பைத்தியத்தைப போக்க வைத்தியர்களையெல்லாம் தேடிஅழைத்து வந்து மருத்துவம் செய்தார், வஞசிப் பத்தர். இப்படியிருக்கும் போது, இஞ்சிபபத்தர், அவர் கையில் சிக்கினார்! வஞ்சியின் ஆட்கள், 'தானொரு வைத்தியரல்ல' என்று எவ்வளவோ சொல்லியும் விடாமல் என். எஸ். கே.-ஐ அழைத்து வந்துவிட்டனர் — அவர்கள் தரும் அடி பொறுக்க மாட்டாமல் தான் ஒரு வைத்தியர் என்றே ஒப்புக்கொண்டார். சிகிச்சை துவங்கிற்று! எப்படி? கிருஷ்ணனை, குழலூதும் கிருஷ்ணன்போல வேடம் பூண்டார்! மதுரம் அமமை, சாட்சாத் கிருஷ்ணனைக் கண்டுவிட்டதாக ஆனந்தம் அடைகிறார். அபபோது திடீரென ஒரு சந்தேகம் வந்து, "கிருஷ்ணா! எங்கே உன் சக்கராயுதம்?", என்று கேட்பார் மதுரம். அப்போது என். எஸ். கே. திண்டாடி உடனே பதிலளிப்பாரே அந்தக் கட்டத்தை இப்போது நினைத்தால் "ஐயோ, கலைவாணரே—உமது கறபனை வளம் நெருப்போடு போய்விட்டதே," என்கிற சோகம் வாட்டுகிறது எம்மை. "ராதே! சிவபெருமான் ரிஷிகளை சம்காரம் செய்ய இரவல் கேட்டார். கொடுத்திருக்கிறேன் ......", என்பார், தயங்காமல். தனது சீடர் **ஆழ்வார் குப்புசாமியை**, கருட வேடம் போட்டுக்கொண்டு வரச்சொல்லி அங்கிருந்து பிறகு வெளியேறுவார்! 'இதனால் மதுரம், தன் தந்தை வஞ்சியிடம், சிலம்பினை கருடன் தூக்கிச் சென்றுவிட்டதாகச் சொல்வார்!!

கதையை ஒட்டி இவ்விதம் நகைச்சுவை நிகழ்ச்சிகளை அமைத்துக்கொள்ளும கற்பனைத் திறன், சாதாரணமானதல்ல. அத்தகைய திறனைப் பெற்றிருந்த கலைவாணர் அதனை **அறிவு பரப்பும்** வகையில் பயன்படுத்தினார். நம் இதயம் சேர்ந்தார்—கலந்தார். "**உத்தம புத்திரன்**", படத்தில் கலையரசர், அய்யங்கார் வேடம தாங்கி வருவார். மதுரம், அய்யங்காரின் சகதர்மிணி. அய்யங்காருக்கு ஒரு ஆதித் திராவிடப் பெண்ணிடம் சபலம் தட்டிவிடுகிறது! எப்படி கதையமைப்பு பார்த்தீர்களா? சாதி, சமயம், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்று ஜம்பம் அடித்துக் கொள்வோரின் உள்ள நிலையை வெகு அழகாகச் சித்தரித்தார் இதன் மூலம்! மதுரம் கேட்பார், "இதுதான் நீர் அரிசன சேவை செய்கிற அழகோ?", என்று. சாதாரணக் காட்சியா, இது! நாட்டில் கண்முன் நடைபெறும் அக்கிரமங்களுக்குக் கொடுக்கும் சாட்டையடி அன்றோ!! சாதிக் கொடுமையால் அன்றோர் நாள் தில்லைவாழ் அந்தணர்தம் சூழ்ச்சியால் **நந்தன்** தீக்குளித்தானல்லவா? அந்த நந்தனுக்கு, சிதம்பரம் நடராசப் பெருமானை எப்படியாவது தரிசித்துவிட வேண்டுமென்கிற ஆவல். அது அந்தக் காலம்! ஆனால் இப்போது சேரியிலிருக்கும் 'நந்தன்' என்ன விரும்புகிறான்? — அதை விளக்கவே, 'கிந்தனை'த் தேர்ந்தெடுத்தார், மறைந்த மாமணி. கிந்தன், ஒரு பழங்குடிச் செல்வன்! எப்படியாவது 'மதராஸ்' சென்று 'கல்லூரி'யில் நுழைய வேண்டுமென்கிற ஆசை கொண்டு விடுகிறான்!! யாராரோ, "நம்ம சாதிக்கடுக்குமோ! வேண்டாம் உனக்கு இந்த ஆசை" என்கின்றனர். பிடிவாதமாகக் கிளம்பி விடுகிறான், கிந்தன். இப்படியமைத்துக்கொண்டார், கதையை அதைச் காலட்சேபமாக்கினார்!! நாடு இதுவரையில், சீதா கல்யாணத்தையும், ஜெய ஜெய பலராமா என்பது போன்றவைகளையுமே கேட்டிருந்தது. ஆனால் N. S. K. காலட்சேபத் துறையிலும் புதுமையைப் புகுத்தினார்! கிந்தனார் காலட்சேபம் — அதே 'பாகதவர்' உருவில் கிருஷ்ணன் —கையிலே ஜாலரா ஏந்தி. குரலிலே முறுகேற்றி, "ஜெய்! ஜெய்! பணபீமா" என்று ஆரம்பமாகும். கிந்தன் எப்படியோ ரயில் ஏறி விடுகிறான. அந்த ரயிலை வர்ணிப்பார், கலைவாணர்,

**"மறையவரோடு பள்ளுப்பறையரை ஏற்றி**
**மதபேதத்தை ஒழித்திட்ட ரயிலே!**

..........................................

**தண்டவாளத்தின் மீதே—ஏறி**
**தாண்டவமாடிடும் ஆண்டவன் நீயே!!**

எப்படி தாக்குதல்? கேட்போர் எல்லோரும் சிரிப்பர்! பிறகு, சிந்திப்பர்!! ரயில், தினசரி உபயோகிக்கப்படும் ஒரு சாதனம். அங்கே அய்யரும் ஏறுகிறார், ஆதித்திராவிடரும் ஏறுகிறார்—'ஏறாதே' என்று மறுக்க இயலுமோ? ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் சாதிபேதம், ஒரு ரயிலில் ஒழியவில்லையோ. ஐயா! என்று மேல் சாதியினருக்குக் குத்திக் குத்திக் காட்டினார். அது மட்டுமல்ல, அந்த ரயில் எங்கிருந்து வந்தது தெரியுமா? முப்பத்து முக்கோடி தேவர்களையும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிசுவரர்களையும் கின்னர கிம்புருடர்களையும் கொண்டிருக்கும் இங்கே தோன்றியது அல்ல—வெள்ளைக்காரன் கண்டுபிடித்தது என்பதையும், "இலண்டனை விட்டு இந்தியாவுக்கு, இரமணியாய் வந்த ரயிலே...ரயிலே..." என்பதன் மூலம் சொல்வார்.

கிந்தனார் காலட்சேபம் பகுத்தறிவுப் பாசறைக்குக் கிடைத்ததோர் செல்வம் எனலாம்! அந்தச் கிந்தனைக் காட்டிய குரலை இனி நாம் கேட்க முடியாது—காற்றோடு போய்விட்டது என எண்ணும் போது, ஐயகோ, கலைவாணரே, என்று அழுகிறோம் நாம் — கதறுகிறது அறிவியக்கம்.

"ஐயோடா!" "இவுரு சொன்னு சொன்னதுதான்! யாரு? இவுரு!" "என்ன ஆச்சரியம்!!" என்கிற சொற்கள் எங்கே பார்த்தாலும் ஒலிக்கும். சுவர்கள் தோறும் காட்சியளிக்கும். எங்காவது N.S.K. தென்பட்டு விட்டாலோ, இந்த வார்த்தைத் தாக்குதல்களிலிருந்து விடுபட போலீசார் வந்தாலன்றி இயலாது. அந்தளவுக்கு அவரது சொற்கள், நகரத்தில் வாழ்வோரிடம் மட்டுமல்ல பட்டிக்காட்டில் வதிவோர் உள்பட எல்லோரது இதயத்தையும் ஊடுருவிச் சென்று, களி நடனம் புரிந்து கொண்டிருந்தன. N.S.K—மதுரம் இருவரும் இல்லாத படங்களே இல்லையெனலாம். இப்போது போல, சமூகப் படங்கள் அப்போது அதிகம் வரா! படாதிபதிகள், பழைய புராணங்களையும், கற்பனை நிறைந்த கதைகளையுமே [illegible] எனினும் கலைவாணர் [illegible] கள்ளிலே வரும் கருத்துக்கொவ்வாத நிகழ்ச்சிகளை எடுத்து வைத்துக்கொண்டு, அதன் மூலம் நகைச்சுவை அளிப்பார். வெறும் நகைச்சுவை மட்டுமா! சிரிக்க வைத்து சிந்தனையையும் தூண்டுவதாகயிருக்கும் அவர் கூறிடும் உரைகள்! இந்த அடிப்படை நோக்கத்தை எந்தப்படமானாலும், அதிலே புகுத்தாமற் போகமாட்டார். இதுவரை உலகில் யாருமே நடித்திராத அளவுக்கு நூற்றுக்கு மேற்பட்ட திரைப்படங்களிலே தோன்றியுள்ளார்! ஒன்றிலாவது உள்ளத்தைக் கிளறும் கருத்துக்களை உரைத்திடத் தவறியதில்லை அவர்! வசனங்களாகட்டும், பாடும் பாடல்களாகட்டும் காட்சி அமைப்பாக இருக்கட்டும் எதிலும் பகுத்தறிவு மணம் கமழும். இந்த அருங்குணம், அவருக்கு நாடக மேடைகளிலே இருந்த காலத்திலேயே உண்டெனக் கூறக் கேட்டிருக்கிறோம். இப்போது, நமது கருத்துக்கள் என்றால் இருக்கின்ற எதிர்ப்பைவிட பத்துப்பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு! அப்பப்ப, எல்லோரும் ஆத்திர விழிகளைத் தூக்கி, அருவருப்பு மொழிகளை வீசி, நம்மைக் கேவலமாகக் கருதிய காலம்! அப்போது கிருஷ்ணன் நமது வேலையை, பணமும் வாங்கிக்கொண்டு, கேட்போரையும் சிரிக்கவைத்தபடி செய்தார். இந்த செயற்கரிய செயலைச் செய்த முதல்வர், N. S. K. அவர்கள் தான்! அதனால் தான், நாடு அவரை 'கலைவாணரே' என்றது—'நகைச்சுவை அரசே' என்றது—நமக்கெல்லாம் உடன் பிறந்தவர்போல விளங்கினார் கலைவாணர், உறு

# பசி! - எனச் சகியார்

ஏழைகள் பசியோடிருப்பதைக் காணச் சகியாதவர் கலைவாணர். 'வயிற்றுக்காகத் தானே வேலை செய்கிறோம். பசிந்தால் எந்த வேலையும் ஓடாது!' என்பார் அவர். பசித்தவர்களுக்கு உணவளித்த அந்த ஏழைப் பங்காளனின் பெருமையை உயர்த்தும் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவத்தைக் கூறிக் கட்டுரையை முடிக்கிறேன்.

நாடகத்துக்காக கலைவாணர் காரில் சென்று கொண்டிருந்தார். இரவு நேரத்தில் கார் கிளம்பிச் சென்றது. டிரைவர் ராஜுவும் மானேஜர் பிச்சாண்டியும் அவருடன் சென்றனர். கலைவாணர் நல்ல தூக்கத்தில் இருந்தார். கார் விழுப்புரம் தாண்டிச் செல்லும்போது அதிகாலை நாலரை அல்லது ஐந்து மணி இருக்கும். பிச்சாண்டியும் ராஜுவும் ஒரு இடத்தில் சாலையைக் கண்டு திடுக்கிட்டார்கள். சுமார் இருபது முப்பது பேர் கைகளில் மண்வெட்டி, கடப்பாறை, அரிவாள் சகிதம் சாலையில் நின்றுகொண்டிருந்தார்கள் கதவைத் திறந்துகொண்டு இறங்கினார் என். எஸ். கே. எல்லோரும் கலைவாணரை அடையாளம் கண்டுகொண்டுவிட்டனர். அவர்கள் ஏன் அந்நேரத்தில் அங்கு வரவேண்டும்? வேலைக்கு வரச் சொல்லியிருந்த ஒரு புண்ணியவான் வேண்டாம் என்று சொல்லியனுப்பிவிட்டான். ஆகவே பசியோடு பல மைல்கள் நடந்து வருகின்றனர் என்பது தெரிந்தது. உடனே கலைவாணர் ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து பிச்சாண்டியிடம் கொடுத்து, "இருவரும் போங்கள். பக்கத்திலிருக்கும் ஊரில் எந்த ஓட்டலுக்காவது சென்று நிறைய இட்டிலியும் சட்டினி சாம்பாரும் வாங்கி வாருங்கள்" என்று சொல்லியனுப்பினார்.

சாலையின் ஓரத்தில் அக்குடியானவர்களை உட்கார வைத்து இரண்டு கைகளாலும் இட்டிலியை அள்ளிப் போட்டனர். வயிறு புடைக்கும்படித் தின்று அவர்கள் மகிழ்வதைக் கண்டு கலைவாணர் மகிழ்ந்தார். அத்துடன் தன் கையிலிருந்த இருபது முப்பது ரூபாயை அவர்களிடம் கொடுத்துச் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளும்படியும் கூறிப்போனார்.

கலைவாணரின் தயாள குணத்தையோ திறமையையோ எந்த விதத்திலும் எடுத்துரைக்கும் சக்தி எனக்கில்லை. சொல்ல வேண்டுமென்ற ஆசையில் ஏதோ சொல்ல முன்வந்தேன், அவ்வளவுதான்.

கே. ஏ. தங்கவேலு
'பேசும் படம்' ஏப். 1956

துணையாக இருந்தார் கடைசி வரை.

உளுத்துப்போன கதைகளை நம்பிக் கெடாதீர், ஆண்டவன் ஒருவனே — அன்பே தெய்வம்— என்கிற கொள்கையை முழக்க ஒருபோதும் தவறியதில்லை அவர். 'திருநீலகண்டர்' படம், சிலருக்கு நினைவிருக்கக்கூடும், அதிலே, கலையரசர், தோன்றுவார்! எப்படி? ஒரு ஆண்டவன் சிலையைச் செய்த படி! அப்படத்தில் 'எரிந்த கட்சி — எரியாத கட்சி' லாவணி பாட்டு நடக்கும். டி. எஸ். துரைராஜ் ஒரு கட்சி, இவர் இன்னொரு கட்சி. முதல் கேள்வி வரும்! "அந்தக் கணபதிக்கு தொந்தி பெருத்தவிதம்... எப்படி?", என்று. கலைவாணர் பதிலளிப்பார் பாட்டு மூலம்! 'அந்தக் கணபதிக்குத் தொந்தி பெருத்த விதம், கொழுக்கட்டை தின்னதினுல் அண்ணே! அண்ணே!!" என்று. சாதாரண பதில்தான்! ஆனால், அதைக் கலைமணியாம் இவர் கூறுகிறபோது, கொட்டகையே அதிரும்!! கலைமகள் சரசுவதி, பிரம்மாவின் நாக்கிலிருப்பதாகப் புராணம் கூறுகிறதல்லவா? அது பற்றியும், லாவணியின் போது ஒரு கேள்வி போடுவார்.

"மறையவன் நாவில் அவள்
உறைவது நிசமானால்
மலஜலம் கழிப்பது எங்கே!
எங்கே?"

யார், என்ன பதிலைச் சொல்ல முடியும்? ஒரு மணி நேர சொற்பொழிவால் ஏற்பட வேண்டிய பிரச்சாரம் அல்லவோ, இது!! "பூம்பாவை" படத்தில், திருஞான சமபந்தருக்கு பார்வதிதேவி பால் புகட்டியதாகவும் அதனால் சிறு வயதிலேயே அவர் 'தெய்வ'க் கவிஞர் ஆகிவிட்டதாகவும் சொல்லப்படுகிறதல்லவா? கலைவாணர், அதே படத்தில்,

"சின்னவயசிலே கன்னித் தமிழிலே
சொன்னான் ஒருபாட்டு
என்று போடுறாயே வேட்டு!
கல்விகற்றுத் தேருமுன்னம்
கவி எழுதிட வருமா?
கட்டுக் கதைகளை
விட்டுத் தள்ளுடா!
குட்டு வெளிப்படுமே....."

கட்டுக் கதைகளை விட்டுத் தள்ளுடா! இல்லாவிடில் குட்டு வெளிப்படுமே. எவ்வளவு பெரிய உபதேசம் இது! இவ்விதம், அறிவுரை தருகின்ற வகையில் ஆடலாலும் பாடலாலும் மக்களை களிபபித்தது மட்டுமல்ல, இறந்து போய்க்கொண்டிருக்கும் தமிழகத்துக் கலைகளுக்கும் உயிரூட்டினார், கலைவாணர். சமீபகாலத்தில், அவர் துவக்கிய, "வில்லுப் பாட்டினை"ப்பற்றி யாவரும அறிவர். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு "மாயாமச்சீந்திரா" எனும படத்தில் கலைவாணர் அவர்கள் பொய்க்கால் குதிரை நாட்டியம் ஆடியது இன்னும் கண் முன்னால் நிற்கிறது. அதற்காக வெகு சிரமம் எடுத்துக்கொண்டு கற்பதற்கரிய அக்கலையைக் கற்று, அப்படத்தில் ஆடிக் காட்டினார்.

ஒரு பொய் கூட சொல்லாமல் படாதபாடுபட்ட அரிச்சந்திரன் கதை எல்லோருக்கும் தெரியும்— காடாறுமாதம் நாடாறுமாதமய ஆண்ட விககிரமாதித்தன கதையையும் பலர் அறிவர் — இதே போல, ஆனால் நவீன கருத்துக்களைப் புகுத்தும் வரையில், கலைவாணர் 'சந்திரஹரி" "நவீன விக்கிரமாதித்தன்" எனும் படங்களையும் உருவாக்கினார். அரிச்சந்திராவுக்குத் தலைகீழ்மாற்றம் சந்திர ஹரி! இதில் சந்திரமதியின் பெயர் மதி சந்திரை என்று இருந்தது— லோகிதாசன் பெயர் தாசலோகி என்று இருந்தது—எப்படி அந்த அரிச்சந்திரன் ஒரு பொய்கூட சொல்ல மாட்டேனென்றானோ அதேபோல சந்திரஹரி ஒரு மெய் கூட சொல்லமாட்டேன் என்று போராடினான்! கலைவாணருடைய கற்பனை எல்லையினை, இப்படங்களில் காணலாம். கண்டுவிட்டு வயிறு குலுங்கச் சிரித்தது, தமிழகம். இன்று, வயிறெரிய நிற்கிறது! இனி, என்று காணப் போகிறோம், இப்படியொரு கலைஞரை!!

'சிவகவி' என்றுதான் ஞாபகம் அதிலே, கேட்பார் கலைவாணர், பக்தி வேடம் புனைந்து உலவும் போலிகள் நடவடிக்கைபற்றி. "நித்த நித்தம் நீராடி நெடுமால் அருளைப் பெறலாமேல், தத்தும் தவளை மீன்களெல்லாம் அத்தனிப் பேறடைய வேண்

# அந்தக் காலமும் - இந்தக் காலமும்

[கலையரசர், 'நல்லதம்பி'யில் வழங்கிய கருத்துச் செல்வம்]

மனுசனை மனுசன் ஏய்ச்சுப் பொழைச்சது அந்தக் காலம்
மடமைநீங்கி நர்உடமை கோருவது இந்தக் காலம்
நெனச்சதை எல்லாம் எழுதிவைச்சது அந்தக் காலம்—எதையும்
நேரில் பார்த்தே நிச்சயிப்பது இந்தக் காலம்
மழை வருமென்றே மந்திரம் செபிச்சது அந்தக் காலம்—மழையை
பொழிய வைக்கவே யந்திரம் வந்தது இந்தக் காலம்
இழிகுலமென்றே இனத்தை வெறுத்தது அந்தக் காலம்—மக்களை
இணைத்து அணைக்க முயற்சி பண்ணுவது இந்தக் காலம்
துரோபதை தன்னை துயிலுரிஞ்சது அந்தக் காலம்—பெண்ணைத்
தொட்டுப் பார்த்தாச் சுட்டுப்பிடுவான் இந்தக் காலம்
சாஸ்திரம் படிப்பது அந்தக் காலம்
சரித்திரம் படிப்பது இந்தக் காலம்
கோத்திரம் பார்ப்பது அந்தக் காலம்
குணத்தைப் பார்ப்பது இந்தக் காலம்
பக்தி முக்கியம் அந்தக் காலம்
படிப்பு முக்கியம் இந்தக் காலம்
கத்தி தீட்டுவது அந்தக் காலம்
புத்தி தீட்டுவது இந்தக் காலம்
பெண்ணைப் பேயெனப் பேசி அணைச்சது அந்தக் காலம்—வாழ்வின்
கண்ணின் ஒன்றாய் எண்ணி நடப்பது இந்தக் காலம்

டாமோ?'' என்று. கங்கையென்றும் காவிரியென்றும அங்கே மூழ்கினல் மோட்சமென்றும் சொல்லுகிறீர்களே அப்படியானல் அங்கேயே கிடக்கும் தவளையும் மீனும் மோட்சம் அடைய வேண்டுமல்லவா? என்று! இதுபோல, கருத்தூட்டும் முறையில், அவர் வழங்கிய சிந்தனைச் செல்வங்கள் ஏராளம். எதை எண்ணுவது? எதைக் குறிப்பிட்டுச் சொல்லுவது?—அவர் நடித்த ஒவ்வொரு படத்திலும் ஒவ்வொரு போதனையிருந்துகொண்டுதான் இருக்கும்! மேனகையை வெறுத்துச் சென்ருரே "விசுவாமித்திரர்'' அபபடத்தில் கிருஷ்ணனும் சம்சாரத்தை விட்டு சந்நியாசி ஆவதும், மதுரம் அம்மை வாதாடி அழைத்து வருவதையும் மறக்கவா முடியும்?

"ஆம்பிள்ளைக்கிடோ, அடி அசடே, புடவை கட்டின பொம்பிளை!'' என்று இவர் வாதாட, "என்னைப் பெத்தவ, உனக்கு வந்தவ... எல்லாம் பெண்ணுதான்'' என்று மதுரம் பதிலுரைக்கும் வகையில் கண்டோமே காட்சி இனனெரு படத்தில் அதனை மறந்திடவா இயலும்? எங்கே தேடுவேன் பணத்தை—என்று,

கருப்பு மார்க்கட்டில்
கலங்குகின்ருயோ
கஞ்சன் கையிலே
சிக்கிக்கொண்டாயோ
கிண்டி ரேசில் சுத்தி
கிறு கிறுத்தாயோ...
சாமிகளடிதனில்
சரண்புகுந்தாயோ
சன்யாசிகோலத்தில்
உலவுகின்ருயோ
திருப்பதி உண்டியலில்
சேர்ந்துவிட்டாயோ
திருவண்ணுமலை
குகை புகுந்தாயோ
.......................
சூடன் சாம்பிராணியாய்
புகைந்துபோனுயோ!

என்று 'பணம்' படத்தில் அவர் ஏங்கியதையும, 'இதோ உலகம' என்று திருக்குறளை எடுத்துக் காட்டியதையும் எப்படி மறக்க இயலும்? எதில்தான் அவர் கருத்தை அளிக்காமலிருந்தார்! குழப்பமும் வேதனையும் தாக்குகிற இந்த நேரத்தில் **கலைவாணரின் சகாப்தத்தில்** கிடைத்த அத்தனை கருத்துகளையும் ஒரு சேரத திரட்டிட நேரமும ஏது? ஏட்டில் இடமுந்தான் ஏது? அவர் சொல்லிவிட்டுப் போன, தந்துவிட்டுச் சென்ற அந்தக் கருத்துக் கருவூலங்களையெல்லாம, நடிகர் சங்கத்தார் தேடியெடுத்து திரட்டிட வேண்டும். ஏனெனில், கலைவாணர், நாட்டுக்கு அளித்துச் சென்ற பெருஞ் செல்வம் அவை! அதனல் நாடு பலனடையவேண்டும் என்று ஆசைப்பட்டார்—அந்த ஆசையையாவது நிறைவேற்றி, என்றும் அவர் புகழ் நிலைக்கச் செய்வோமாக!!

★

# என் ஆசை

என் கலையுலகப் பயணத்தின் ஆரம்ப நாட்களிலேயே நல்ல படிப்பினைகளை மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்று என் உள்ளம் விரும்பியது. திரைப் படக் கலையுலகுக்கு வரு முன்னரும், நாடக நாட்களிலே நான் ஒவ்வொரு படிப்பினைகளை நாடகங்களின் மூலம் சொல்லி வந்திருக்கிறேன், எனக்கு அந்தப் பழக்கம் பிறகு நன்ருக உதவியது. இப்படி மற்றவர்களுக்கு ஏதேனும் நல்ல படிப்பினை கூற வேண்டும் என்று என் மனதில் தோன்றுவதற்குரிய காரணம் என்ன? பிரச்னைகளால் சூழப் பட்ட என் இளமை வாழ்வு, என்னைச் சிந்திக்க வைத்தது; சிந்தித்தேன், அதன் பயனே யாவும்!

யாவரும் எந்தத் துறையிலும் நல்ல தேர்ச்சி யடையுமுன்பு அந்தத் துறையில் பழக்கப்பட்டவர்களைப்போல அபிநயிக்கக் கூடாது; அப்படி அபிநயித்தால் பிராண சங்கடமே வந்தாலும் வரலாம் என்ற படிப்பினையை 'அசோக்குமார்' என்னும் படத்தில் வைத்தியரின் மகன் போல நடித்துச் சொல்லியுள்ளேன்.

சாதி மத பேதம் என்பது வெறும் பித்தலாட்டம் என்ற படிப்பினையை'சாலிவாஹனன், படத்தில் சுட்டிக்காட்டினேன்.

கள்ளக் காதலரின் சங்கடங்களையும் முடிவையும் 'அம்பிகாபதி'யில் சொல்லியுள்ளேன்.

'சின்ன வயதிலே
கன்னித் தமிழிலே
பாடினன் ஒருபாட்டு-என்று
போடுருயே வேட்டு'

என்று 'பூம்பாவை' எனும் படத்தில் கேட்டு, ஞான சம்பந்தருக்குப் பார்வதியே டைரக்டாக வந்து பால் தந்த சங்கதிகளை வெளிப்படுத்தினேன்.

'நல்ல தம்பி'யில் [illegible]க்கு ஜமீன் ஒழிப்பு-பற்றி[illegible] அதிகம் இன்னும் உட்பிரிவு[illegible], வசனங்கள் மூலமாகவும் பாடல் மூலமாகவும் பற்பல படிப்பினைகள் உண்டு.

நமக்கெல்லாம் 1960-ல் நல்ல காலம் வரபோகிறது. அதற்குள் மக்கள் மனப் பண்பும் நன்ருக மாற வேண்டும் என்ற படிப்பினையை 'மணமக'ளில் சொல்லியுள்ளேன்.

ஒரு முதலாளியிடம் வேலைக்காரனுக யிருப்பதற்காக, அவனுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு நீதியை மறந்து விடக்கூடாது. அவன் போடும் சோற்றைவிட, மனித நீதிதான் பெரிது. 'கர்ணனின் செஞ்சோற்றுக் கடன் பண்பு கர்ண கடூரமானது' என்ற படிப்பினையை 'நன்னம்பிக்கை' என்ற படத்திலும், எழுத்தறிவில்லாதவனல், எவ்வளவு தொல்லைகள் வரும் - ஒரு ஊரின் வாரீசே கெட்டுப் போனலும் போகலாம்—என்ற படிப்பினையை 'குடும்ப விளக்கு' என்ற படத்திலும் கூறியிருக்கிறேன்!

இன்னும் எத்தனையோ படங்கள்! எவ்வளவோ படிப்பினைகள்! இனி மேலும்கூட, படங்களில் புதுப் புதுப் படிப்பினைகளைச் சொல்லவேண்டும் என்ற ஆவல் என்னுள்ளே, வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. 'உலகில் வாழும் மனித இனங்களைப் பற்றிய பிரச்சினைகளை நல்ல வழியில் தீர்ப்பதற்குத் தான் கலை உபயோகப்பட வேண்டும்' என்பதே என் முடிவான முடிவு—தீர்ப்பான தீர்ப்பு! இயற்கையின் அழகை மட்டும் வர்ணிக்கும் கலைஞன் தன் முழு வேலையைச் செய்து முடித்துவிடவில்லை—அது சாதாரணமான ஒரு 'பெயின்டரி'ன் வேலைதான்! இதைப் படத்தயாரிப்பாளர்கள் எல்லோரும் தெரிந்து கொள்ளும் நாள் என்ருே?

**கலையரசர்**

"கலைச் சோலை"
- 1957 - பொங்கல் மலர்

# கிருஷ்ணு! நண்பா!! உதாரா!!!

'கலைவாணர்' என். எஸ். கே. என்ருல் ஒவ்வொரு ஏழையும், இயலாதோரும் தத்தம் துயர் துடைக்கும் 'ஒரு உயிர்' என்றே, கருதி வந்தனர். பொது மன்றங்களும், கல்விக் கூடங்களும்,—ஏன்? அரசும் கூட— நிதி உதவிகள் என்ருல் அவரை நோக்கத் தயங்கியதில்லை! அவரும் உடன் சென்று உதவ 'சாக்குப் போக்கு' சொல்லியதில்லை!! அவரால் தனிப்பட்ட முறையில், 'ஐந்துபத்து நூறு' என்று பலன் பெற்ருேர் பலர். திரண்ட செல்வம் சம்பாதித்தார்! அத்தனையையும் வாரி வாரி அழித்தார்!! அத்தகைய பெருவள்ளல், என். எஸ். கே. அவர்கள் ஒரே ஒரு ஆண்டில் (1944) என்னென்ன காரியங்களுக்கு உதவினூர் என்கிற பட்டியலைத் தருகிறேம் அதற்கு முன்னும் 1944-க்குப் பின்னும் அவர் எவ்வளவோ சம்பாதித்தார் — எவ்வளவோ அள்ளி அள்ளிக் கொடுத்தார். அதில், ஒரு துளி இது. காணுங்கள்! இப்படியொரு வள்ளல் இனித் தென்படுவாரா?—என்று எண்ணிட எண்ணிட இதயம் வெடிக்கிறது, எமக்கு :-

8-1-44 அலப்புழை — திருவாங்கூர் வஞ்சி பூவர்
9-1-44 கொச்சி — பண்டுக்காக நாடக மூலம்
11-1-44 கோட்டயம் — ரூ. 15000-க்கு மேல்.
13-2-44 திருப்பூர் சரசுவதி சங்கீத சபா 'கிந்தனர்'
17-2-44 பாலக்காடு கால்பந்தாட்டக் கிளப்புக்கு ,,
21-2-44 இராமநாதபுரம் பள்ளிக்கூட நிதி ,,
15-2-44 கோவை செஞ்சிலுவை நிதி ,,
11-3-44 கரூர் சினிமா தியேட்டர் நிதி ,,
12-3-44 மதுரை கோபால கான கலா நிதி ,,
19-3-44 காரைக்குடி திருவாவடுதுறை கோவில் நிதி ,,
11-4-44 உடுமலை செஞ்சிலுவை சங்க நிதி ,,
14-4-44 பெரியகுளம் முகமதியர்பள்ளிக்கூட நிதி ,,
16-4-44 சிவகாசி பழனியாண்டவர் விளையாட்டுச் சங்க நிதி ,,
3-4-44 தூத்துக்குடி வாலிபர் சங்க நிதி ,,
24-4-44 திண்டுக்கல் லேடிஸ் கிளப் நிதி ,,
25-4-44 கோவை செஞ்சிலுவை நிதி ,,
25-4-44 கோபிசெட்டிபாளையம் செஞ்சிலுவை நிதி ,,
30-4-44 துடியலூர் மில் தொழிலாளர்களுக்கு ,,



1-5-44 பவானி செஞ்சிலுவைச் சங்க நிதி ,,
15-5-44 திருச்சி புத்தூர் வண்டி நிலையத்துக்கு ,,
27-5-44 திருமங்கலம், கோயில் நிதி ,,
28-5-44 ராஜபாளையம் கோயில் பண்டுக்காக ,,
25-5-44 காஞ்சிபள்ளிக்கூட நிதிக்காக ,,
30-5-44 பழனி செஞ்சிலுவைச் சங்க நிதி ,,
17-6-44 கோலார் ஆதித்திராவிட அச்சுநிலையத்துக்காக ,,
20-6-44 செய்யாறு செஞ்சிலுவைச் சங்கத்துக்காக ,,
14-7-44 சேலம் முதல் வகுப்புக் கல்லூரி நிறுவ ,,
23-7-44 சிதம்பரம் பள்ளிக்கூட நிதிக்காக ,,
25-7-44 திருச்சியில் வங்க நிவாரண நிதிக்கர்க ,,
3-9-44 ஈரோடு திராவிடா கழக நிதிக்காக ,,
13-9-44 திருவாரூர் கொசு நிவாரண நிதிக்காக ,,
21-9-44 பொள்ளாச்சி திராவிடர் பதிப்பகத்துக்காக ,,
28-9-44 பொன்னேரி கஸ்தூரிபாய் நிதி ,,
14-10-44 மைலாப்பூர் பள்ளிக்கூட நிதி ,,
12-12-44 அப்பூர் உயர்நிலைப் பள்ளி நிதி ,,
25-12-44 சென்னை டிராமாடிக் கிளப்பு நிதி ,,
13-12-44 தாராபுரம் செஞ்சிலுவைச் சங்க நிதி ,,
30-1-45 சென்னைத் தமிழிசைசங்கத்துக்காக ,,

உதவியென்று வந்தோரை யெல்லாம் வெறும் கையுடன் அனுப்பியது இல்லை! இவரால் கல்வி பெற்ருேர் பலர். கலியாணம் செய்துகொண்டு குடும்பம் நடத்துவோர் ஏராளம். சென்னைச் சுயமரியாதைச் சங்கத்துக்கு ரூ. 900-ம், 'திராவிட நாடு' ஆரம்பமானபோது மனமுவந்து அவர் வழங்கிய ரூ. 500-ஐயும், காஞ்சிக் கல்லூரிக்கும் சென்னைத் தியாகராயர் கல்லூரிக்கும் அவர் நாடக மூலம் அளித்த தொகையும், கழகத் தோழர்கள் சென்றபோதெல்லாம் சிரித்த முகத்துடன் உதவிய தொகைகளையும், எண்ண எண்ண வேதனை அதிகமாகிறது. கிருஷ்ணு! நண்பா!! உதாரா!!! நீ போய்விட்டாயே, நீ போய்விட்டாயே, என்று நாடும், நாட்டிலுள்ள ஒவ்வொரு ஏழையும், பொதுக் கூடங்களும், கலங்குகின்றன. கண்ணீர் வடிக்கின்றன. யாரே, இத்துயரைப் போக்க இயலும்?

# இலங்கையின் கண்ணீர்!

தமிழ் உலகும் கலை உலகும் கண்ணீர் வடிக்கின்றன. நகைச்சுவை அரசு என். எஸ். கிருஷ்ணன் மறைந்த செய்தியைக் கேட்டு, தமிழ் மக்கள் மட்டுமல்லாமல் இலங்கையில் சிங்களவரும் திடுக்கிட்டு வருந்துகிறார்கள். அவர் நடித்த சுமார் நூறு படங்களில் ஒன்றையாவது காணாதவர்கள் இலங்கை உள்ளிட்டு தமிழ்நாட்டில் யாரும் உண்டா என்பது சந்தேகம். அவர் நடிப்பை ஒரு முறையும் கண்ட யார்தான் அவரை மறக்கமுடியும்? அவர் அகால மரணமடைந்ததைக் கேட்டு துக்கப்படாதிருக்கவா இயலும்?

தமிழ்நாட்டிலே நடைச்சித்திரம் எழுதி புகழ்பெற்ற அறிஞர். வ. ரா. அவர்கள், "தமிழ்ப் பெரியார்கள்" என்று எழுதிய நூலில் என். எஸ். கிருஷ்ணனையும ஒரு பெரியாராகச் சேர்த்திருக்கிறார். இது குறித்து கருத்து வேற்றுமைகள் ஏற்படுமென்பது அவருக்குத் தெரியும். அதனால் தாம் அவரையும் ராஜாஜி உள்ளிட்டு மற்றும் சிலரையும தமிழ்ப் பெரியார்களாக பொறுக்கிய காரணத்தை விளக்கியுள்ளார். "ஜன சமூகத்தை தங்கள் வாழ்க்கையின் மூலமாக மாறச் செய்பவர்கள் பெரியார்கள். இதைத் தாங்கள் அறிந்தும செயயலாம தாங்கள் அறியாமலும செய்யலாம். அனுகூலம் எதுவும் இல்லாமல் பிரதிகூலங்களுக்கு. மத்தியில் வாழ்ந்தும் வீறுகொண்டு எழும் பேர்கள பெரியார்கள் என்பதில் சந்தேகமே இல்லை" என்று பறைசாற்றுகின்றார்.

என். எஸ். கே மிக எளிய குடும்பத்தில் பிறந்தவர். சிறு பிராயத்தில் நாடகக் கொட்டகையில் சோடா, கலர், பீடிவிற்று, அதில் கிடைக்கும் சொற்ப ஆதாயத்தைக்கொண்டு, தம் பெற்றோருக்கு உதவி, வாழ்க்கையை ஆரம்பித்த அவர், பத்து லட்சரூபாய் வரை தான தர்மங்கள் செய்து பல கோடி உள்ளங்களை தமது நகைச்சுவை நடிப்பால் கவர்ந்திருக்கிறார். தமது சொந்தக் கற்பனையால் நகைச்சுவை மூலம் யாருக்கும் புண்படாத முறையில் சமூகத் தீமைகள் பலவற்றை அம்பலப்படுததி அவற்றை நீக்க பொதுமக்கள் கருத்தை உருவாக்கினார். பாமர பொதுமக்கள்தான் அவரது தெய்வம்.

"கிருஷ்ணன் தமிழ் மக்களை சிரிக்க வைக்கும் மகான். தமிழர்கள் தங்கள் துயரத்தை சில நிமிஷங்களேனும் மறக்கும்படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள் நாட்டின் பொதுநன்மையை மதிக்காதவர்களே" என்று கூறுகிறார் வ. ரா. தமிழ் மக்களை மட்டுமன்றி, இலங்கையிலே சிங்கள மக்களையும் சேர்த்து சிரிக்கவைத்தவர் அவர். நாடகத்திலே நகைச்சுவையைத் தனித்துப் பிரிக்காமல், கதையுடனேயே ஹாஸ்யமாக கதை இரண்டற இணைததும், பெண்ணுக்கும் அதில் சரிபங்கு அளித்தும, புதுப புது முறைகளைக் கையாண்டும, வில்லுப்பாட்டு முதலிய பல பழைய கலைகளுக்கு புது மதிப்பும் மரியாதையும் ஏற்படவும் செய்தவர்.

நாடகக்காரரென்றால் சமூகத்திலே தாழ்வாகக் கருதப்பட்ட காலம் ஒன்று இருந்தது. அதை அடியோடு மாற்றி கலைஞர்களுக்கு அதிக மதிப்புக் கிடைக்கும்படி செய்தவர்களில் என். எஸ். கே. முக்கியமானவர். ரஷ்யா முதலிய நாடுகளுக்குச் சென்று தமிழ்க் கலைஞர்களின் மதிப்பை உயர்த்தியவர். ஐம்பது வயதும் ஆகாத நிலையில் அவர் பிரிந்தது தமிழுலகுக்கும், கலை உலகுக்கும பெரும் நஷ்டமாகும். அவரது பிரிவால் அவரது கலைத்துணைவியாரான மதுரத்துக்கும் தமிழ் நடிகர் கலைஞர்களுக்கும ஏற்பட்டுளள பெரும் வருத்தத்தில், பொதுமக்களும் வெகுவாகப் பங்குபற்றுகின்றார்கள்.

நகைச்சுவை அரசு என். எஸ். கே. மறைந்தாலும், அவரது புகழ் என்றென்றும் தமிழ் கூறும் நல்லுலகில் பொலியும்.

—"வீரகேசரி" கொழும்பு.

ரஷ்ய அரசாங்கத்தின் அழைப்பிற்கிணங்க, ரஷயா சென்று சுற்றுப் பயணம் செய்துவிடடுத் திரும்பிய, கலைவாணர் என் எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கு, 4—11—51ல் மதுரை தமுக்கம் திடலில் சர்வகட்சி சார்பில் ஒரு வரவேற்புக் கூட்டம் நடத்தப்பட்டது. அக் கூட்டத்தில் கலைவாணர் பேசியதாவது:—

"ரஷ்ய அரசாங்கம் கலை மூலம் நாட்டுக்கு என்ன நன்மை செய்யலாம் என்பதை நன்ருக அறிந்துள்ளது. கலை மூலம் என்ன சீர்திருத்தம் செய்யலாம் என்பதையும் அறிந்துள்ளது." ஆனால் நம் நாட்டில் நிலை அப்படியில்லை.

### பாராட்டல் இல்லை

"நான் 'நல்ல தம்பி' என்ற சினிமாப் படத்தின் மூலம் மதுவிலக்கு பிரசாரம் புரிந்தேன் ஆனல் அதற்காக நம் அரசாங்கத்திடமிருந்து ஒரு பாராட்டுக் கடிதம் கூட வரவில்லை. இதை எண்ணிப் பார்க்கும்போது வெட்கப்பட வேண்டி இருக்கிறது."

### வழியனுப்பவுமில்லை வரவேற்கவுமில்லை

"மேலும் நான் ரஷ்யா சென்று திரும்பியது குறித்து நம் அரசாங்கமும் காங்கிரசு நிறுவனமும் கவனிக்கவே இல்லை ஒரு காங்கிரஸ்காரர் கூட என்னை விசாரிக்கவில்லை. இவர்கள், வெளிநாடு செல்லும் தம நாட்டுக் கலைஞன் ஒருவனை வழியனுப்பவில்லை என்பதையும், அவன் திரும்பி வரும்போது வரவேற்கவில்லை என்பதையும், எண்ணிப் பார்க்கையில் நாம் வெட்கித் தலைகுனிய வேண்டியதாகின்றது."

### என் ஆசை

"நம் நாட்டில் பட்டினி இல்லை—ஏழைகள் இல்லை—பிச்சைக்காரர்கள் இல்லை—திருடர்கள் இல்லை—என்ற நிலை ஏற்பட வேண்டும். அந் நிலையைப் பார்த்துவிட்டே இறக்க வேண்டுமென்பதே என் இதய பூர்வமான ஆசையாகும்."

# கலையரசர் சீர்திருத்தப் பணி

**கலைவாணர் N. S. K. 21—8—54ல் காஞ்சியில் நடைபெற்ற சீர்திருத்த மாநாட்டில் தலைமை தாங்கிய காட்சி, கண்முன் நிற்கிறது! அன்று அவர் ஆற்றிய உரையின் பகுதிகள் இதோ!!**

"காஞ்சீபுரத்தில் நடைபெறுகிற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சீர்திருத்த மாநாட்டிற்குத் தலைமை தாங்குகிற பொறுப்பை என்னிடம் தந்துள்ள நண்பர்களுக்கு என் வணக்கமும நன்றியும் சொல்லிக்கொள்கிறேன.

நான் இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்க ஒபபுக்கொண்டதற்குக் காரணம், இந்த நாட்டில் சிலர், 'நடிகர்களுக்கு மக்களிடத்தில் என்ன வேலை? அவர்கள் ஏன் பொதுவாழ்வில், சமூகப் பணியில் ஈடுபடுகிறார்கள்? எனறு கேட்பதின் மூலம் காட்டுகிற எதிர்ப்பு உணர்வினால் தூண்டப்பட்டதுதான்!

மக்களுக்கு நகைச்சுவை மூலம், தேவைப்படும கருத்துக்களைச் சொல்ல முடியும் என்பது என் கருத்து.

நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினுக்கு, இன்று, உலக சமாதானப் பரிசளிக்கப்பட்டிருக்கிறது. அவருக்கு இந்தப் பரிசு தரபபட்டதின் மூலம் நகைச்சுவைக் கலைக்குக் கிரீடம் தரித்திருக்கிறார்கள்.


இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், உலக சமாதானத்தை நிலை நாட்டுவதில் நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளினும் பங்கு பெறுகிறார் என்றால், 'நகைச்சுவை நடிப்பின் மூலம் கருத்துக்களை சிரிக்க சிரிக்கச் சொல்லி, மக்களைச் சிந்திக்க வைக்க முடியும்,' என்பது தானே பொருள்?

தெனாலிராமன்பற்றிய கதைகள் நீங்கள் கேட்டிருப்பீர்கள் அவரது கலை, நகைச்சுவை வெறும் கோமாளித்தனத்தின் பாற்பட்டதல்ல; உண்மையிலேயே, சிந்தனையைத் தூண்டக் கூடியதும் கூட!

## சீர்திருத்தம்

இன்று நாட்டில். சீர்திருத்தம் என்னும் வார்த்தை பலராலும் பேசபபடுகிறது. எங்கெங்கே திரும்பினாலும் சீர்திருத்தம் பேசப்படுகிறது.

சீர்திருத்தம் என்பது வெறும் பெயர் மாற்றத்தால் ஏற்படுவதல்ல; மக்களுடைய அன்றாட வாழ்க்கையில், நடததையில், அவர்களிடம் நிலவுகிற மூடப்



ஏடுகள் படிப்பதும், படித்ததைப் பயன்படுத்துவதும், கலையரசரின் நித்தியத் தொண்டாகும்! இந்த நூலகம் இனி அவரைக் காணவா போகிறது?

பழக்கங்களும், மடமை எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட செய்கைகளும் அறவே நீக்கப்பட்டு, புதிய அறிவுக்குப் பொருத்தமான செய்கைகளும் இடம் பெறுவதுதான் சீர்திருத்தமாகும்.

மக்கள் பிறர் சொல்வதையும் கேட்க வேண்டும்; தாங்களாகவும் சிந்திக்க வேண்டும். கேட்டு, சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து, வருகிற முடிவை செயலில் நடைமுறையில் வைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் சீர்திருத்தமாகும்.

யார் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி தன்னிஷ்டப்படி காரியமாற்றுகிற மனப்போக்கு, மாற்றப்பட்டு, யார் சொல்வதையும் கேட்டு, சிந்தித்து சீர்தூக்கி, பின் செயல் புரிகிற நிலைக்கு மக்களைக்கொண்டு வருவதே, இந்த மகத்தான மாற்றத்தை உண்டு பண்ணுவதே சீர்திருத்தமாகும்!

இதில் இன்னும் ஒன்று உண்டு. சிலருக்கு சீர்திருத்த எண்ணமும் இருக்கும்; பழைமைப் பிடியிலும் இருப்பார்கள்; இது கூடாது. இந்த இரண்டுங்கெட்டான் நிலை மிகமிக மோசமானது. ஒன்று பழைமைக் கருத்துக்களை, சடங்குகளை, சம்பிரதாயங்களை அறவே விட்டுவிட்டு, பகுத்தறிவுக் கருத்துக்களை, சீர்திருத்த செயல்களை மேற்கொள்ளுங்கள்; அல்லது பழைமையிலேயே உழலுங்கள்! இதை விடுத்து, 'இரண்டிலும் கொஞ்சம் கொஞ்சம் வைத்துக் கொள்ளுகிறேன், என்று நினைப்பது நல்லதல்ல! ஆபத்தானதுங்கூட!”

## நமது பணி

“சிலர் என்னைக் கேட்டனர்— 'சீர்திருத்தம், காலப்போக்கில் தானாகவே மக்களிடம் இடம் பெற்றுவிடாதா? அதற்காக எதற்கு மாநாடுகள், கூட்டங்கள் எல்லாம்,'—என்று! நான் கூறினேன்—'சீர்திருத்தம் தானாகவே காலப்போக்கில் மக்களை வந்தடையக்கூடும். குழந்தை பிறக்கிறது; தானாகவே புரண்டு படுக்கிறது; தானாகவே தான் தவழ்கிறது; பின்னர் நடக்க ஆரம்பிக்கிறது. தவழ்கிற குழந்தையைப் பெற்றோர்கள் தூக்கி நிறுத்தி, நடை வண்டியைப் பிடித்து இங்கும் அங்குமாக நடத்திக் காட்டி, சுவற்றைப் பிடித்து நடக்கவும் பழக்கி, குழந்தை நன்றாக நடக்குமாறு செய்கிறார்கள்; பெற்றோர்கள், குழந்தை நடக்கும் பழக்கத்திற்கு உடனிருந்து உதவி செய்யாவிட்டாலுங்கூட, குழந்தை நடக்காமலேயே இருந்துவிடாது; என்றாவது ஒருநாள் நடக்கத்தான் செய்யும்; ஆனால், ஒரே ஒரு வித்தியாசம்; பெற்றோர்கள், குழந்தைக்கு உதவிசெய்தால் குழந்தை தனது ஒரு வயதிலேயே நன்றாக நடக்கப் பழகிவிடும்; பெற்றோர் உதவி செய்யாவிட்டால், குழந்தை நடப்பதற்கே, மூன்று நான்கு வயதாகலாம். அதைப் போலத்தான் சீர்திருத்தம், நாட்டில், நடைமுறைக்குக் காலப்போக்கில் வருவதென்றால் சில நூற்றாண்டுகள் ஆகலாம்; அந்தக் காலத்தைக் குறைத்து, விரைவிலேயே சீர்திருத்தத்தை மக்களிடம் இடம் பெறச் செய்வதற்கு, இந்த மாதிரியான மாநாடுகள்; சீர்திருத்தவாதிகள் தேவைப்படுகின்றனர்', —என்று குறிப்பிட்டேன்.”

“இந்தப் பணியை நாம் மேற்கொண்டிருப்பது, எந்தத் தனிப்பட்டவரையும் வாழ வைக்கவேண்டும், அல்லது, கெட்டொழியச் செய்யவேண்டும் என்பதால் அல்ல; எல்லா மக்களும் பகுத்தறிவு பெற்றவர்களாய், நல்வாழ்வு பெற்றவர்களாய் ஆக்கப்பட வேண்டுமென்பதினால்தான!”

“சீர்திருத்தக் கருத்துக்களை மக்கள்புரிந்துகொள்ளவும், அதன் தேவையை உணரவும், நன்கு சிந்திக்க வேண்டும்' சிந்தித்து, அவர்களாகவே இந்தப் புதுமைக் கருத்துக்களை ஏற்றுக்கொண்டால்தான் சமூக சீர்திருத்தம் நிலைக்கும்.” ★

'முரசொலி' மலரில் கலைவாணர் தீட்டிய கருத்து.

# வீரமும் ஈரமும்

வீரமுள்ளவனால்தான் ஈரமுள்ளவனாக இருக்கமுடியும்—அவன்தான் ஈர நெஞ்சினனாக இருக்கத் தகுதி பெற்றவன்.

* * *

அஞ்சி அஞ்சிச் சாகும் கோழை, ஈர நெஞ்சினனாகக் காணப்பட்டால் அவனை நம்பவேண்டாம் அவனது நெஞ்சீரம், கோழைத்தனத்தின் மற்றொரு உருவம்தான் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள்.

* * *

அரண்மனை வாழ்வு — அரசபோகம் — மக்கள் தொடர்பினாலும் மகிழ்வு—அத்தனை இன்பங்களையும் துறந்துவிடத் தைரியமுள்ள குமணனிடம்தான், தன் தலையை அரிந்து தமிழுக்காகத் தரும் அளவுக்கு, ஈரம் இருக்கமுடியும்.

* * *

பணக்காரர்களிடம் பெரும்பாலும் ஈர நெஞ்சைக் காணோமே ஏன்? ஈர நெஞ்சினால் பணம் முழுவதும் செலவாகிவிட்டால் வரும் காலம் என்ன ஆவது—என்று அஞ்சும் கோழைகள் அவர்கள்!

ஐம்பது ரூபாய்க்கும் குறைவாக மாதச் சம்பளம் வாங்கும் ஏழைகளிடம் ஈர நெஞ்சம் இருப்பது ஏன்? அவர்கள் வருங்கால பயமற்ற வீரர்கள்! அநேக ஏழைகளின் குடும்பம், இந்த ஈர நெஞ்சினால் மிகமிக அல்லல் படுவதையும் கண்டிருக்கிறேன்—ஆயினும் ஈர நெஞ்சத்தினால் யாவும் இழந்தவர்கள், வீர நெஞ்சத்தினால் விருதுபெறப் போகிறவர்கள் என்று எண்ணிச் சமாதானப்பட்டிருக்கின்றேன்,

ஈரமில்லாதவன் வீரமாகப் பேசினாலும் நம்பக்கூடாது; வீரமில்லாதவன் ஈரமாகப் பேசினாலும் நம்பக்கூடாது. அவர்கள் விழி கண் குருடர்கள்—கண் இருப்பது போலிருக்கும்; பயன் இருக்காது; அதை மூடிவைக்கவும் ஒரு “கூலிங்கிளாஸ்” தேவை!

**வீரம்-வெல்லும் ஆற்றல்**

**ஈரம்-இரங்கும் பண்பு**

4-ம் பக்கம் தொடர்ச்சி

பருகிறது என்பதனை எடுத்தியம்பவும் வேண்டுமா என்று இறுமாந்து கூறினோம். எரி தழலில் இட்டு விட்டோம் நமது ஏந்தலின் உடலை! சூழ நின்று, துடித்தோம், கண்ணீர் வடித்தோம், வேறென்ன செய்ய வல்லோம், பிடி சாம்பலாகிப் போனார்! என்று பேய்க் குரலிற் பேசுகிறது காலம். ஆம்! கலைவாணர் மறைந்தார்! கண்ணீர் வெள்ளத்தில் நாடு ஆழ்ந்து கிடக்கிறது.

ஆசிரியராக, மருத்துவராக, ஆடுநராக, அருந்தோழனாக, தப்படிபோனாக எடெழுதுவோனாக, இஞ்சிபத்தனாக எத்தர் தம் குட்டினை எல்லாம் உடைத்திடுவோனாக, எண்ணற்ற 'வடிவம்' பூண்டு உலகிலே காணக்கிடக்கும் மூடத்தனங்களை எல்லாம் கேட்போர் முகம் சுளித்திடாத முறையில், தித்திக்கும் கலை கலந்து தெவிட்டாத முறையில், நகைச்சுவை தந்தன்றோ முறியடித்து வந்தார்.

முள்ளைத் திருப்பி வைத்தால் போகிறது, முருகனை எதற்கு? என்று கேட்டிடும் 'வடிவம்' இன்றும் திரையிலே காண்கிறோமே, ஐயகோ! அவர் இடுகாடு எடுத்துச் செல்லப்படும் கொடுமையையா, இத்துணை இதம் தரும் காட்சிகளைக் கண்ட கண்கள், காண வேண்டும். என்ன கொடுமை! என்ன கொடுமை' இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக, தமிழக மக்களை ஓயாது சிரித்திடச் செய்தார்—ஆனால், ஒரே நாளில், நாடு முழுவதுமன்றோ கண்ணீர் பெருக்கிடச் செய்துவிட்டார். இதற்கோ, அரசே! எமக்கு நகைச்சுவையை இந்த அளவுக்கு ஊட்டி வந்தனை!

சிரியுங்கள். சிரியுங்கள்! நன்றாகச் சிரித்து மகிழ்ந்திருங்கள்! வேறு ஜீவராசிகளுக்குக் கிடைத்திடாத செல்வம், இந்தச் சிரிப்பு! என்றெல்லாம் எமக்கு எடுத்துரைத்து வந்தனையே — ஒரு நாள், நீவிர் அனைவரும் இத்தனைக்கும் மேலாகக் கதறிடப் போகிறீர். என்று எண்ணிக்கொண்டிருந்தீரோ? கலைவாணரே! ஏன் எமது இதயத்தைத் தட்டி, உள்ளே நுழைந்து, இடம் பெற்று இருந்திட்டீர்— ஏன், எமது இதயமெலாம் பிளந்திடத்தக்க விதத்திலே, எமைவிட்டுப் பிரிந்தீர். நாங்கள் உமது நகைச்சுவையைப் பெற்றுப் பயன் அடைந்தது கண்டு, பொறுமைப்பட்டு, காலம் உமை இழுத்தேகிற்றோ.

நாட்டு மக்களுக்கு நகைச்சுவை அளித்திட நாலாறு பேர், நான் நீ என்று போட்டியிட்டுக் கொண்டு வருவர்—உளர்—ஆனால் கலைவாணர் போல, இதயத்தில் இடம் பெற வேறு எவருளர்— எங்ஙனம் இயலும். கலைவாணர், ஒரு தனி மனிதர் மட்டுமல்ல, நாடு பெற்ற ஓர் தனிச் சிறப்புடை வாய்ப்பு — மலடி வயிற்று மகன்—புதையல் எடுத்த தனம் — தனிச் சிறப்புடை காலக் கூறு — பொன்னொளி.

கலை அழகு இனியும் கிடைக்கும் — சுவையும் பெறுதல் கூடும்—ஆனால் இவை, மக்களின் நிலையினை உயர்த்திடும் பயனைத் தரல் வேண்டும் என்ற நோக்குடன பணியாற்றிடத்தக்கார் முன்வருவரோ?

உலகின் கோணல்களும் உள்ளத்திலே புகுந்து நெளியும் கேடான எண்ணங்களும், நீக்கிடவும் போக்

# சிறந்த வழிகாட்டி

கலைஞர் என்.எஸ்.கே. தொடர்ந்து பல ஆண்டுகளாக நகைச்சுவைப் பாத்திரமாக நடித்து வந்தபோதிலும், குன்றாத புதுமையின்பம் இருந்துவந்தது. அதற்குக் காரணம், அவர் சமுதாய வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, நாட்டின் அரசியல் பொருளியல் மொழி நிலைமை முதலிய எல்லாவற்றையும் நன்றாக உணரும் உள்ளம் படைத்திருந்தார். சமுதாயச் சீர்திருத்தம் முதலியவற்றைத் தாம் உணர்ந்தவாறே மற்றவர்களுக்கு உணர்த்தும் ஆற்றலும் பெற்றிருந்தார். சமுதாயத்தின் குறைகளையும் எடுத்துக் காட்டினார்; சமுதாயத்தின் கனவுகளையும் விளக்கியுரைத்தார். குறைகளைக் கூறும் போதும், கனவுகளை விளக்கும்போதும், தமக்கு இயல்பான நகைச்சுவையைக் கூட்டிக் குழைத்து நல்லகலை விருந்தாக்கித் தந்தார்..

பாடிய மெட்டிலேயே பாடி, ஆடிய போக்கிலேயே ஆடிக் கலை விருந்து அளிப்பது எளிமையானது. பயிற்சி ஒன்றே உடையவர்களும் அதைச் செய்ய முடியும். கலைஞர் என். எஸ். கிருஷ்ணனிடம் மக்கள் எதிர்பார்த்தது அது அல்ல. ஒருபுதிய நாடகமோ புதிய படமோ என்றால், அதில் என். எஸ் கே. நடிக்கிறார் என்றால், மக்கள் இதுவரையில் கண்டிராத புதிய கலை விருந்து கிடைக்கும் என்ற ஆவலுடன் எதிர்பார்ப்பார்கள். எதிர்பார்த்தவாறே விருந்து பெற்று மகிழ்ந்தார்கள். ஏமாற்றம் அடைந்ததே இல்லை. அத்தகைய புதுமையான சிந்தனை அவரிடம் இயல்பாக இருந்தது.

கலையுலகத்தில் உள்ள நடிகர்கள் பெரும்பாலும் தாம் உண்டு தம் கலை உண்டு என்று ஒரு மூலையில் ஒடுங்கிக் கிடப்பார்கள். அதுவே பெரும்பாலும் காணப்படுவது. கலைஞர் என். எஸ். கே அவ்வாறு மூலையில் ஒடுங்கியோ ஒதுங்கியோ இருக்க முடியவில்லை. அவருக்கு இருந்த ஆற்றலின் மிகுதியே அதற்குக் காரணம். பொது மக்களின் தொண்டராக அவர் முன் வந்தார். நாடக மேடையிலும் திரைப் படத்திலும் மட்டும் நிற்காமல், வேறு பல மேடைகளிலும் வந்து நின்றார். அதனால் கலையுலகத்திற்கு விரிவான இடம் பெற்றுத் தந்தார். இவ்வகையில் மற்றக் கலைஞர்களுக்கு அவர் நல்ல வழிகாட்டி ஆனார். கலைஞருக்குக் கலையரங்கம் மட்டும் அல்லாமல், மற்றப் பொதுவாழ்வுத் துறைகளும் உண்டு என்று நிலைகாட்டிய வாழ்வு அவருடைய நல் வாழ்வு.

—டாக்டர்

**மு. வரதராசனார்.**

கிடவும், தமது வாழ்நாளினை தொண்டாற்றும் வாய்ப்பு எனக்கொண்டு, தாம் புகுந்த துறையினையும், தமக்குக் கிடைக்கும் அரிய அருமையுள்ள ஆற்ற லினையும் ஆற்றலையும் பயன்படுத்தும் தூய நோக்கமும் பெற்று உழைப்போரே, உலகு திருத்திட வந்த உத்தமர்கள் என்று இலக்கணம் கூறப்படுகின்றது. அத்தகையோர் அணியணியாகக் கிடைப்பதில்லை—கிடைத்திடில், அவனியிலே அல்லல் ஏது, அறம் கெடுவதேது! அழகு குலைவதுதான நடைபெறுமா? அத்தகையோர், நீண்டகால வறட்சிக்குப் பிறகு கிடைக்கும் மாமழை! வளம் ஊட்டுகின்றனர்—ஆனால் அந்த அரிய நிகழச்சி அடிக்கடி நடைபெறுவதில்லை.

**கலைவாணர், அத்தகைய ஒரு நிகழ்ச்சி.**

அவர், கலைத்துறையில் இருந்ததால், அதன் மூலம், தமது கருத்தினை அளித்து, மக்கள வாழ் வாங்கு வாழ்தல் எனும் குறிக்கோளை நடாத்திக் காட்டினர். எனினும் வேறு ஏதேனும் துறையிலே இருந்து பணியாற்ற நேரிட்டிருப்பினும், கலைவாணர், இஃதே போலத்தான், இதம் தருவோராக, இல்லாதாரிடம் அன்புகொண்டோராக, அவர்களை உயர் நிலைக்கு அழைத்துச் செல்லும் உற்ற தோழனாக விளங்கி இருந்திருப்பார். கலை மூலம் அவர் தமது தொண்டினைச் செய்தார் — பெருமளவு செய்வதற்கு அந்தத்துறை வாய்ப்பளித்தது, வளம் அளித்தது — ஆனல், சிறப்பாகப் போற்றப்படவேண்டியது, குடிசை இவை ஆகா; போற்றுதலுக்குரியது. தாயுள்ளம். அஃதே போலத்தான் கலைவாணருடைய நல்லஉள்ளம்தான், போற்றுதலுக்கு உரியது: அனைவரும் பெற முடியாதது; கலை அவருக்கு ஒரு கருவி — வசீகரமான கருவி—அஃது சிறப்புறக் கிடைக்கப் பெற்றோர் அனைவருமா, கலைவாணராயினர்! சங்கீதச் சரபங்களாயினர்! சங்கீத சாம்ராட்டுகளாயினர்! முத்தமிழ் வித்தகராயினர்! 1008-மெடல் பெற்ற ராஜபார்ட்டுகளாயினர்! வயிறு குலுங்க வைக்கும் பபூன்களாயினர்! நகைச்சுவை அரசர்களாகவில்லை. நாடு, அவர்களைக் கைதட்டிவரவேற்றது — காசுகொடுத்தது — கைலாகு கொடுத்தது—வாழ்த்து இதழ்கள் கூடத் தந்தது—ஆனல் தன் **இதயத்தைத்** தரவில்லை. நகைச்சுவை மன்னரோ, மக்களின் இதயத்தில் இடம்பெற்றார் — மக்களின் இருகரங்களுக்குள் சிறைப்பட்டுக் கிடந்துவிடவில்லை.

கலைவாணர் மறைந்த செய்தி கேட்டு, மனம் உடைந்த நிலையில், 'சென்னை நகரமே இது நாள்வரை கண்டதில்லை இவ்வளவு மக்கள் திரளை' — என்று, எளிதில். மனதில் நெகிழ்ச்சிக்கு இடமளித்திடாது இருந்துவரும் ஏடுகள் பலவும் எழுதிடத்தக்க பெருந் திரள் கூடி, நகைச்சுவை அரசரைக் கடைசி முறையாகக் காணவும், கண்ணீரைக் காணிக்கை யாக்கவும், ஓர் இரவு முழுவதும் வந்த வண்ணம் இருந்தது—



சர். சி. பி-யுடன் என். எஸ். கே.

அவருடைய தொண்டு உள்ளந்தான். மாளிகை வாழ்விருந்தால் கனகமணிக் கொட்டிலிலிட்டும், மண் குடிசையில் உழன்றால், மடியில் கிடத்தியும், அன்னை, தன் மகவைக் கொஞ்சுதல் காண்கிறோம். அண்டு, போற்றுதலுக்குரியது, மாளிகை, மண் எதனால் இது? அவர் தம் நடிப்புகண்டு சுவைத்தவை மறவாததால் மட்டுமா? வேதனை கப்பிய முகத்துடனும், விம்மிக்கொண்டும், ஓலமிட்டபடியும், ஐயோ கிருஷ்ணா! என்று அலறியபடியும், உனக்கா மரணம் இந்த வயதிலா? என்று கதறியபடியும் வந்தோ

அனைவரும், படக் காட்சிகளிலே கலைவாணர் காட்டிய காட்சிகளை எண்ணி அல்ல — தத்தமது உள்ளத்திலே மகிழ்ச்சியையும் நன் மதிப்பையும், நட்பையும் பாசத்தையும், அவர், தமது நற்றொண்டினால் பதிய வைத்திருந்தாரே, அந்த உணர்ச்சியால் உந்தப்பட்டு வந்தனர். தமது 'உடன் பிறந்தார்' என்ற பந்தத்தைப் பெற்று வந்தனர்—ஒரு நட்சத்திரம் கீழே வீழ்ந்துவிட்டதைக் காண அல்ல.

அவர் கரம் பட்டதால், பட்டுப்போக இருந்த வாழ்வு தளிர்த்தது குறித்தும், பராரியாகித் தவித்தவன அவர் பார்வை பட்டதால், புது வாழ்வு பெறறது பற்றியும், அவருடைய இன்சொல் கேட்கப் பெற்றதால் துயரம் பறந்தோடிப போனது குறித்தும் அங்கு திரண்டுவந்தோர், பேசிப் பேசி அழுதனர்—அவருடைய நடிப்புக் கலையின் நேர்த்தியைத் தாங்கள் இன்னின்ன படத்தில், கண்டோம் என்பது குறித்து அல்ல. கலையின தலைமகன் அவர்—ஐயமில்லை—கலையுலகு அதனை ஏற்றுக்கொள்கிறது. அவர் போல், நாடக மேடையிலும் சரி, திரைவானிலும் சரி, புகுந்த நாள் தொட்டு அரசோச்சினோர் இல்லை—அனைவரும் அறிவர்—அவருடைய கலைத்திறம், ஒரு புதிய நடிகர் பரம்பரையையே உருவாக்கி வைத்துள்ளது; கண்ணீர்விட்ட வண்ணம் பல நடிகர்கள் அதனை எடுத்துரைத்தனர் — ஆனால் அவருக்காக அன்று கண்ணீர் சிந்திய பல இலட்சம் மக்கள், ஒரு நல்ல மனிதரை இழந்தோம், மனிதர்களை நல்லவர்களாக்க அருமபாடுபடட ஒரு அனபரை இழந்தோம், மக்களின மன அழுக்கைப போக்கிட அறிவொளி வழங்கிய ஒரு அண்ணலை இழந்தோம, செல்வம கிடைத்தும செருக்குறுமல, உயர்வு கிடைத்தும புருவத்தை நெரித்திடாமல, கிடைத்ததைக் கேட்போர்க்குக கொடுத்து, அதிலே கிடைப்பதே பேரின்பம் என்று வாழ்ந்து வந்த பேரறிவாளனை, மக்களிடம் நாள தவருமல் பழகுவதிலே உள்ள சுவையை மாளிகை பலவற்றுக்கு அதிகாரியான பிறகும, மறவாத ஒரு மாணபு பெற்ற, மக்கள தோழனை, இழந்தோமே, எனபது குறித்துத்தான் பேசினர், அழுகுரலில்.

கலைவாணர், ஏழைக் குடும்பததிலே பிறந்தார்—ஏழைக் குடும்பம் கண்டு கலங்கும எல்லா விதமான அவல நிலைமைக்கும் ஆளாகத்தக்க நிலையில்தான் தன குடும்பத்தை விட்டுச் சென்றிருககிருர். நாடு வாழவும், மக்கள் முனனேறவும், தன் திறமத்தனையும் செலவிட்டார்—கலை உலகு அவர் காலடியில் கொட்டிய பல இலட்சங்களை, அவர் வாரி வாரி இறைத்தார்.

என் மனைக் குரியவளே,

பழங்கள் தொங்குகின்ற முதர மலைக்கு உரிமையாளனை குமணன தந்த செல்வத்தினை,

உன்னை விரும்பி, வாழுகின்றவர்களுக்கும், நீ விரும்பி வாழுகினறவர்களுக்கும்,

பலவகையிலும் மாட்சிமைபபட்ட ஒழுக்கமுள்ள உன சுற்றத்தினருககும,

உனனிடம பிறகு பெறறுக் கொள்ளலாம் என்று கடன் தந்திருபபவாகளுக்கும,

இவாகளுககுத்தான தரவேண்டும என்று வரையறை செயதுகொள்ளாமல், என்னைக் கேட்டுத்தான் தரவேணடும என்றும கருதாமல்,

இந்தப் பொருளை நெடுநாட்களுக்கு வைத்துக் கொணடு வல்லமையோடு வாழுவோம் என்றும் கருதாமல்,

நீயும்

எல்லோருக்கும் கொடுப்பாயாக.

என்றல்லவா, குமணனிடம் கொடைபெற்ற புலவர் பெருஞ்சித்திரனுர் பாடிச் சென்றுர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், இதனை நடத்திக் காட்டினுர்—குடும்பம் வறுமையிடம்தான் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**

**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப நடந்துகொண்டார்.

அவருடைய ஈகை உயிரூட்டம் நிரம்பியதாக இருந்தது — பெற்றவர் பிறகோர் நாள் கொடுப்போராகத் தக்கவண்ணம் அவர்களை உயர்த்தி, நிலையினை மாற்றி அமைத்தது. ஒரு 'கலைமுறை' முழுவதும் பேசிடலாம், அவருடைய 'ஈகை' குறித்து —ஆனுல் இபபோது இயலாது, கண்ணீர் உலராத நிலையிலே நாடு உளது.

இம்மைச் செய்தது
மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகனுக

கலைவாணர் இருந்தார் இலலை. நமக்குக் கிடைத்துள்ள வாயப்பு, வளம், நாமை நாடிவருபவர் பிறரையும் வாழவு பெறச செய்வதற்கே என்ற பெரிய நோக்குடன அவர், அள்ளி அள்ளிக கொடுத்தார்; பணத்தை மட்டுமா, கலையை!! எல்லாவற்றினையும் விட மேலாக, நல்ல உள்ளத்தில் மட்டுமே ஊற்றெடுக்கக்கூடிய அனபினை!

'எங்கே தேடுவேன் பணத்தை?' என்று அலைவார், கிடைத்தாலோ, உனக்கு, உனக்கு, உனக்குந்தான், என்று தான வழங்குவார்.

அதனுல்தான், அவர் இறவாப் புகழ் பெற்றுர்.

**உரையும் பாட்டும் உடையோர் சிலரே**

**மரையிலைபோல மாய்ந்திசினோர் பலரே.**

தாமரையைத்தானே, புலவர் போற்றினர்—அதன் மரையிலையையா? அஃதேபோல, கலைவாணர் போற்றப்படுகிருர்—மற்றும பலர், கன தனவானகளானுல், சிலர் பாராட்டுரை படிப்பர், அக்கணமே அவர்தமை மறப்பர்.

நமது நெஞ்சிலெலலாம கலைவாணர் நீங்காத இடம் பெற்றுவிட்டார்.

அதிலும், அவர் ஈளை கட்டி இருமி, இழுத்துப் பறித்துககொண்டிருந்துவிட்டு, ஈராண்டு ஓராண்டு நலிவுற்றுக கிடந்து, 'தொந்தி சரிய மயிரே வெளிர நிறை தந்த மனைய உடலே' பெற்ற எழுபதாண்டு எண்பதாண்டு முதியவராகி மாய்ந்தாரில்லை — ஐம்பதும் நிரம்பப்பெருத வயதினர்—இரு கிழமைகளே

நோயெனப் படுத்தார்—நேற்றைக்கு இன்று தெளிவு தான், நாளை மேலும் குணமாகும் என்றெல்லாம் கூறினர், அந்நிலையில், எவரும் எதிர்பாராத வகையில், திடீரென மறைந்தார். எனவேதான் வேதனை அதிர்ச்சியாகிவிட்டது.

இந்த அதிர்ச்சி, எளிதிலே நீக்கப்படக் கூடியதல்ல.

இந்த அதிர்ச்சியால் தாக்குண்டு கிடப்போர், அவர் குடும்பத்தார் மட்டுமல்ல — தமிழகமே — கலை உலகே நிலை குலைந்து கிடக்கிறது.

ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக்கொள்ளத் தக்க நிலையில் இல்லை. ஆறுதல் கூறப்புகினும், அழுத வண்ணம்தான் முயற்சிக்க இயலும்.

நாட்டினரே! அழுகிறோம், அழுகிறோம், ஆற்றொணப் பெருந்துயர் வந்துற்றதால்.

தேற்றுவார் இல்லை; மாற்றுவார் காணோம். எங்கும் துக்கம் கப்பிக் கிடக்கிறது—எவரும் கண்ணீர் பெருக்கியபடி உள்ளனர்.

கலைவாணர், நமக்கெல்லாம் இதுநாள்வரை அளித்த அரும் பெரும் 'தொண்டு' மிகப் பெரிது; நாம கண்ணீரன்றி வேறு எதனை அவருக்குக் காணிக்கையாக்கிட இயலும்.

பகுத்தறிவாளன் — புல்லறிவாளரின் போர்க்கோலம் கண்டு கலங்காது களம் நின்று வெற்றி கண்ட அஞ்சாநெஞ்சன் — திருவிடத் தீரன்—முன்னேற்றக் கழகத்திடம் துவக்கநாள் தொட்டு தோழமை பூண்டு, துணைநின்ற தூயவன், மறைந்தான். இவ்வளவு விரைவில், மறைந்திடும் நிலைவரினும் வரக்கூடும் என்று எண்ணித்தானோ என்னவோ, அவர், நாட்டுக்கு நல்கவேண்டிய நலன்களை வேகவேகமாக, குவியல் குவியலாக வழங்கிவந்தார்.

அந்தோ! தமிழகமே! அந்தப் புன்னகை—அந்தப் பொலிவு — அந்த இன்சொல்—அந்தப் பகுத்தறிவு மின்னொளி—அந்த நேர்த்தியான நடிப்பு—அந்தக் கொடை — அந்தத் தொண்டு — அந்த நல்ல உள்ளம், இனி எப்போது, காணப்போகிறோம்.

இருண்டது நம் இல்லம்—இதயம் வெந்தது என்செய்வோம்! அழுவோம! கூடிக் கூடி அழுகிறோம்! பேசிப் பேசி அழுகிறோம. ஒருவரை ஒருவர் பார்த்துப்பார்த்து அழுகிறோம். நினைந்து நினைந்து அழுகிறோம! வேறு வழியில்லை! வேறு வழியில்லை.

—அண்ணாதுரை.

